# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 115/2023**

**Prosecution witness : அ.சா.35** **Date : 07.07.2025.**

| | |
|---|---|
| **Name : அழகேசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரி செங்காட்டூரில் குடியிருந்து டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 06.09.2016ம் தேதியன்று காலை 10.00 மணி சுமாருக்கு மீன் வாங்கிக் கொண்டு நான் வரும் போது மல்லிகுந்தம் உப்பு பள்ளம் என்ற இடத்தில் மேச்சேரி காவல் துறையினர் விநாயகர் கோயில் சிலை கரைப்பதற்காக பிக்கப் வண்டியில் சென்ற போது நடந்த சாலை விபத்து சம்மந்தமாக போலீசார் வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் சேட்டு என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வதுகையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) நான் மேச்சேரி செங்காட்டூரில் வசித்து வருகிறேன். மயில்சாமி என்பவரை எனக்கு தெரியாது. விபத்துக்குள்ளான வாகனத்தில் நான் பயணம் செய்யவில்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. காவல் துறையினர் கேட்டுக் கொண்டதால் தான் அவர்கள் விசாரித்ததால் நான் கையொப்பம்

செய்தேன் என்றால் ஆமாம். மற்றபடி விபத்து எப்படி யாரால் நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.